# தவக்காலப் பிரச்சாரம் 2024

## “என் பின்னே வாருங்கள்”

**கோலாலம்பூர் மாமறை மாவட்ட மறைக்கல்வி நிலையத்தால் தயாரிக்கப்பட்டது**

### அறிமுகம்

இந்த ஆண்டு தவக்காலம் பிப்ரவரி 14, 2024 அன்று தொடங்குகிறது. இது கத்தோலிக்கத் திருஅவையின் ஆழமான ஆன்மீகத் தயாரிப்பு மற்றும் ஒழுங்கமைப்பின் காலமாகும். இந்தக் காலத்தில் திருஅவை இறைவேண்டல், உண்ணாநோன்பு மற்றும் தர்மம் ஆகிய தவக்காலத்தின் மூன்று முக்கியத் தூண்களின் வழியாக நாம் மனம்திரும்ப நம்மை அழைக்கிறது. மனம்திரும்புதல் என்றால் என்ன? இந்த மூன்று முக்கிய நடைமுறைகள் என்ன? ஒன்றாக இணைந்துக் கற்றுக்கொள்வோம். சிந்திப்போம்.

### பழைய கதை

திருஅவை தவக்காலத்திற்குத் திரும்பும்போது, இறைவேண்டல், உண்ணாநோன்பு, மற்றும் தர்மம் செய்வதற்கான அழைப்பைக் கேட்கும்போதெல்லாம், ஒவ்வொரு ஆண்டும் மீண்டும் மீண்டும் செய்யும் இந்த நடைமுறைகளில் ஏதேனும் அர்த்தமுள்ளதா என்று நாம் வியந்துபோகலாம். இது ஏன் இத்தவக்காலதில் முக்கியம்?



கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நமக்கென குறிக்கப்பட்டது போல, தவக்காலமும் கடவுளோடு நெருங்கிவரும் அழைப்பை நமக்கு நினைவூட்டுகிறது. கிறிஸ்து என்னும் பரிசு நம் வாழ்வில் வந்ததற்காக நாம் நன்றி சொல்லாமல் கிறிஸ்மஸைக் கொண்டாடினால் எவ்வாறு அர்த்தமிருக்காதோ அதுபோலத் தான் அவரை அறிந்து கொள்ளாமலும் அன்பு செய்யாமலுல் இருந்தால் தவக்காலமும் அர்த்தமற்றதாகப் போய்விடும்.

கடவுள்மீதுள்ள அன்பிலும் அறிவிலும் வளர்ந்து, நாம் செய்யும் அனைத்திலும் அவரை நோக்கவேண்டும் என்ற நாம் தேர்ந்தெடுக்கும் இந்தப் பயணமே, மனம்திரும்புதல் எனப்படும். தந்தையின் வார்த்தையான இயேசு, தந்தையிடம் செல்வதற்கான வழியை நமக்குக் காட்டுவதற்காக ஒரு மனிதனாக வந்தார். அவருடையப் பணி வாழ்வு முழுவதும் அவர் விடுத்த அழைப்பு - “என்னைப் பின்செல்லுங்கள்”.

### <u>தொடக்க இறைவேண்டல்</u>

விண்ணகத் தந்தையே, நாங்கள் எங்கிருந்தாலும், உம் அழைப்புக்கு நாங்கள் செவிகொடுத்து, உம்அன்பை நினைவுகூரும் இந்த சிறப்பு தவக்காலத்திற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.இத்தவக்காலத்தில் இறைவேண்டல், உண்ணாநோன்பு மற்றும் தர்மம் ஆகிய தவக்கால நடைமுறைகளை நாங்கள் பின்பற்றிட எங்கள் உள்ளத்தையும் எண்ணத்தையும் திறந்தருளும். இதனால், உம் பார்வையில் நாங்கள் தூயவர்களாகவும், உம்மை மகிழ்ச்சிப்படுத்தவும் செய்வோமாக. நாங்கள் செய்யும் அனைத்திலும் உம்மை அறியவும், உம்மை அதிகமாக அன்பு செய்யவும் இவை எங்களுக்கு உதவி செய்வனவாக. ஆமென்.

<u>**HOSEA**</u>

Come back to me,
With all your heart,
Don’t let fear keep us apart
Trees do bend,
Though straight and tall
So must we to others’ call


**Long have I waited for your coming,**
**Home to me and living,**
**Deeply our new life**

## தவக்காலத்தின் மூன்று முக்கியத் தூண்கள்

இறைவேண்டல், உண்ணாநோன்பு, மற்றும் தர்ம்ம் ஆகியவை மனம் திரும்புதலோடு தொடர்பு கொண்டுள்ளது? பாவத்தை தவிர்ப்பது மட்டும் போதாதா? இந்த நடவடிக்கைகள் குறிப்பாகத் தவக்காலத்தில் தர்மம் செய்வது ஏன் மிகவும் சிறப்பு வாய்ந்த்தாக உள்ளது? லூக்கா நற்செய்தி 18: 18-23 இல் உள்ள கதையை கேட்போம் வாருங்கள்.

18அப்பொழுது தலைவர் ஒருவர் அவரிடம், "நல்ல போதகரே, நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார் 19 அதற்கு இயேசு அவரிடம், "நான் நல்லவன் என ஏன் சொல்கிறீர்? கடவுள் ஒருவரைத் தவிர நல்லவர் எவருமில்லையே! 20 உமக்குக் கட்டளைகள் தெரியும் அல்லவா? விபசாரம் செய்யாதே. கொலை செய்யாதே. களவு செய்யாதே. பொய்ச் சான்று சொல்லாதே. உன் தாய் தந்தையை மதித்து நட" என்றார்.21 அவர், "இவை அனைத்தையும் நான் இளமையிலிருந்தே கடைப்பிடித்து வருகிறேன்" என்றார்.22 இதைக் கேட்ட இயேசு அவரிடம், "உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது. உமக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்" என்றார். 23 இவற்றைக் கேட்டு அவர் மிகவும் வருத்தமுற்றார். ஏனெனில் அவர் மிகுந்த செல்வம் உடையராய் இருந்தார்.

1. இயேசுவிடமிருந்து அந்த மனிதன் எதிர்பார்த்தது என்ன? கட்டளைகளைக் கடைபிடித்த அந்த மனிதர் ஏன் மனநிறைவு அடையவில்லை?
2. இயேசு ஏன் அந்த மனிதரிடம் அவருடைய செல்வங்களை எல்லாம் விற்று ஏழைகளுக்கு தருமாறு கூறினார்?
3. ஏன் அந்த மனிதர் வருத்தத்தோடு திரும்பி சென்றான்.




**செல்வந்தரிடம் இயேசு கூறியதைப் போல, இயேசு நம்மையும் இந்த உலக செல்வங்களையெல்லாம் முழுமனதோடு விட்டு விடுமாறு அழைக்கிறார்.**

**பணத்தைத் தருவதும், நம்முடைய செல்வங்களை ஏழைகளோடுப் பகிர்ந்துகொள்வது உலக ஆசைகளை, உலக செல்வங்களை மனமுவந்து விட்டுக்கொடுப்பதாகும். ஏனென்றால் முடிவில்லா வாழ்வு பெற இயேசுவைப் பின்செல்ல இதுவே வழி.**

**இறைவேண்டலும், உண்ணாநோன்பும் கூட நம்மையே வெறுத்து, கடவுளை முழுமையாகப் பின்செல்லவும், அவரோடு ஒன்றித்திருக்கவும் உதவும். இந்த மூன்று நடவடிக்கைகளும் தவக்காலத்தின் தூண்கள் என்று நாம் அறிவோம். இவை மூன்றும் உலக ஆசைகளிலிருந்து நம்மை விடுத்து, கடவுளோடு நெருங்கிய உறவு கொள்ள நம்மை ஆழமாக இட்டுச்செல்கிறது.**


## தர்மம் செய்தல் ஒறுத்தலின் அடையாளம்

**சில சமயங்களில் நாம் கடவுளின் அன்பும் கருணையும் தாராளமாக இருப்பதை உணரும்போது, குறிப்பாக நாம் அவருக்கு எதிராகப் பாவம் செய்திருக்கும்போது, நம்முடைய உடைமைகளை விட்டுக்கொடுக்க நாம் தூண்டப்படலாம். லூக்கா நற்செய்தி 19:1-10 லிருந்து பின்வரும் கதையைக் கேட்போம்.**

*1 இயேசு எரிகோவுக்குச் சென்று அந்நகர் வழியே போய்க் கொண்டிருந்தார்.*
*2 அங்கு சக்கேயு என்னும் பெயருடைய செல்வர் ஒருவர் இருந்தார். அவர் வரிதண்டுவோருக்குத் தலைவர்.*
*3 இயேசு யார் என்று அவர் பார்க்க விரும்பினார்; மக்கள் திரளாய்க் கூடியிருந்தால் அவரைப் பார்க்க முடியவில்லை. ஏனெனில், சக்கேயு குட்டையாய் இருந்தார்.*
*4 அவர் முன்னே ஓடிப்போய், அவரைப் பார்ப்பதற்காக ஒரு காட்டு அத்தி மரத்தில் ஏறிக் கொண்டார். இயேசு அவ்வழியேதான் வரவிருந்தார்.*
*5 இயேசு அந்த இடத்திற்கு வந்தவுடன், அண்ணாந்து பார்த்து அவரிடம், "சக்கேயு, விரைவாய் இறங்கிவாரும்; இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்" என்றார்.*
*6 அவர் விரைவாய் இறங்கி வந்து மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றார்.*
*7 இதைக் கண்ட யாவரும், "பாவியிடம் தங்கப்போயிருக்கிறாரே இவர்" என்று முணுமுணுத்தனர்.*
*8 சக்கேயு எழுந்து நின்று, "ஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன்; எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்று அவரிடம் கூறினார்.*
*9 இயேசு அவரை நோக்கி, "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று; ஏனெனில் இவரும் ஆபிரகாமின் மகனே!*
*10 இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்" என்று சொன்னார்.*

**1) சக்கேயு ஏன் இயேசுவைப் பார்க்க விரும்பினார்?**

**2) சக்கேயு ஏன் தன் உடைமைகளை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுவதாக உறுதியளித்தார்?**



சில சமயங்களில் சக்கேயுவைப் போலவே கடவுளின் கருணைக்காக நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். நன்றியுள்ளவர்களாக உணர்கிறோம். குறிப்பாக, நாம் பெற்ற கருணைக்கு நாம் தகுதியற்றவர்கள் என உணரும்போது, ஏழைகளுக்குக் கொடுத்து கடவுளை நாம் மாட்சிப்படுத்துகிறோம். மத்தேயு 25:40 இல் இயேசு கூறுகிறார். “மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்த்தையெல்லாம் எனக்கே செய்தீர்கள்” ஏழைகளுக்கும் நாம் தர்மம் செய்யும்போது, அந்த மனிதருக்கு மட்டும் நாம் உதவி செய்யவில்லை, அந்த ஏழைகளுக்கும் தந்தையாக இருக்கும் கடவுளை நாம் மாட்சிப்படுத்துகின்றோம்.

நிறைவாக, தவக்காலத்தின் இறுதி வாரமான புனித வாரத்தில் நாம் கொண்டாடும் இறுதி இராவுணவின் போது, இயேசு, தம் சீடர்களின் பாதங்களைக் கழுவி அவர்களுக்கு ஒரு புதிய கட்டளையைக் கொடுத்ததை நினைவு கூருகிறோம். “நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை” ஏழைகளை அன்பு செய்து முழுமையாக அவர்களுக்கு பணிசெய்வது. தர்மகாரியங்களைச் செய்து நாம் வாழ்ந்தால், கிறிஸ்து நமக்குக் கொடுத்த மற்றவரை அன்பு செய்யுங்கள் என்னும் கட்டளையை நாம் வாழ்ந்து காட்டுகிறோம்.

## இத்தவக்காலத்தில் ஏழைகளுக்கு என்ன சேவை செய்யலாம்?

ஓவ்வொரு ஆண்டும் கோலாலம்பூர் மாமறைமாவட்டம் தவக்காலத்தின்போது, கிறிஸ்துவின் உடலின் உறுப்புகளாகிய நம்மை, நமது சமுதாயத்தில் உள்ள ஏழைகள், ஒதுக்கப்பட்ட மக்கள் ஆகியோருக்கு அன்பு மற்றும் சகோதரத்துவத்தின் நற்செய்தியைக் கொண்டு செல்லும் பணியில் பங்களிக்க அழைப்பு விடுக்கும் பிரச்சாரத்தை நடத்துகிறது.

இந்தப் பிரச்சாரத்தை மாமறை மாவட்ட மனித வளம் மேம்பாட்டு அலுவலகம் ஏற்பாடு செய்து, மனித வள மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்த நிதி சேகரிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.



பொருள் உதவியாக நம்மால் அதிகம் பங்களிக்க முடியாவிட்டாலும், நம்மைச் சுற்றியுள்ள கடுமையான சமூக நிலவரங்களை அதிகம் தெரிந்துகொண்டு, ஏழைகளுக்குச் சேவை செய்ய பணம், நேரம், அல்லது பொருட்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நம்மால் முடிந்த பங்களிப்பைத் தருவதன் வழியாக இதில் நாம் ஈடுபடலாம்.

இத்தவக்காலத்தில் உங்கள் படைப்பாற்றலுக்கு ஏற்ப நிதி திரட்ட உங்களை அழைக்கிறோம். மேலும் AOHD கீழ் உள்ள 8 பணிக்குழுக்களில் ஒன்றிற்கு நிதி செலுத்தலாம். நிதி திரட்டலின் முடிவில் AOHD கீழ் இயங்கும் ஏதேனும் ஒரு பணிக்குழுவில் நீங்கள் இணைந்து ஏழைகள், உதவி தேவைப்படுவோர் , ஒதுக்கப்பட்டோர் ஆகியோரைத் தேடிச்சென்றுப் பணி செய்யலாம். துயரத்தில் இருப்போருக்கு நம் முகத்தைத் திருப்பிக்கொள்ளாமல், நம்மை முதலில் அன்பு செய்த கடவுளின் அன்புக்காக, அவரின் அன்பு கருணை இரக்கத்தின் உடனிருப்பைக் கொண்டுவர நம்முடைய நேரத்தையும், முயற்சிகளையும், பங்களிப்போம்.

## நிறைவு இறைவேண்டல்

**புனித பிரான்சிஸ் அசிசியாரின் இறைவேண்டல்**

**அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே** - 2
அன்பனே இறைவனே என்னிலே வாருமே
அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே

1. பகைமை உள்ள இடத்தில் பாசத்தை வளர்க்கவும் - 2
வேதனை நிறைந்த மனதில் மன்னிப்பு வழங்கவும்
கலக்கம் அடையும் வாழ்வில் நம்பிக்கை ஊட்டவும்

2. தளர்ச்சி ஓங்கும் பொழுது மனதிடம் தழைக்கவும் - 2
இருளே சூழும் வேளை ஒளியை ஏற்றவும்
துயரம் வாட்டும் நேரம் உதயம் காணவும்

3. ஆறுதல் அன்பை அளித்து புரிதலை வளர்க்கவும் - 2
கொடுப்பதில் நிறைவைக் கண்டு மன்னித்து வாழவும்
தன்னலம் ஒழித்துப் புதிய உலகம் படைக்கவும்

கூடுதல் விவரங்களுக்கு AOHD அகப்பக்கத்தைச் சென்று காணுங்கள். - இந்த அலுவலகம் கத்தோலிக்கத் திருஅவையின் கீழ் தவக்காலப் பிரச்சாரம் மட்டுமல்லாமல், பல்வேறு வகையான மனிதாபிமானமிக்க பணிகளைச் செய்து வருகிறது.